கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 23/2024**

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஸ்குமார் | வயது | 40 |
| தந்தை பெயர் | வீராச்சாமி | ஜாதி | |
| தொழில் | ஆர்டிஸ்ட் | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மாங்குடியில் வசித்து ஆர்டிஸ்டாக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 16.11.2022 ம் தேதி இரவு 10.00 மணியளவில் கமலாபுரம் பிரிவு ரோட்டில் உள்ள ஆண்டவர் டீக்கடை எதிரே நானும், ஆட்டோ டிரைவர் மகேஸ்வரன் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி இருச்சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்தார். நான் அவரிடம் ஏன் வேகமாக ஓட்டிவந்து நிறுத்திகீறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அந்த ஆஜர் எதிரி என்னை குச்சிகாரி, தேவடியா மகனே உன்ன அடிச்சா யார் கேட்பார்கள் என்று சொல்லி அருகில் கிடந்த பீர்பாட்டிலை எடுத்து உடைத்து எனது மூக்கின் இடது பக்கதில் குத்திவிட்டார். மேலும் பீர்பாட்டிலை காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எனக்கு கொலை மிரட்டல் விடுத்து சம்பவ இடத்தில் இருந்து ஓடிவிட்டார். அதன் பிறகு எனது அப்பா வீராச்சாமியும், தம்பி விக்னேஷும் எனது நண்பர் மகேஸ்வரனும் என்னை 108 ஆம்புலன்சு மூலம் திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தாலுக்கா காவல் நிலைய போலீசார் விசாரணை செய்தார்கள். போலீசாரிடம் நடந்த சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (புகார் வாக்குமூலம் அசா-ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2024.11.20 17:55:45 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 23/2024**

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீராச்சாமி | வயது | 62 |
| தந்தை பெயர் | அப்பாவு | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | மாங்குடி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மாங்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 எனது மகன் ஆவார். கடந்த 16.12.2022 ம் தேதி இரவு 10.00 மணியளவில் அசா.1 அவரது நண்பர் மகேஷ்வரனும், ஆண்டவர் டீக்கடை எதிரே பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ஏற்கனவே உள்ள தொழில் முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு அவரது இருச்சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து நிறுத்தியுள்ளார். ஏன் இப்படி மோதுவதுபோல் வேகமாக வந்து நிறுத்திகிறாய் என்று அசா.1 கேட்டுள்ளார். உன்னை அடித்தால் யாருடா கேட்கபோரா குச்சிகாரி, தேவடியா மகனே என்று திட்டி அருகில் கிடந்த பீர்பாட்டிலை எடுத்து அங்கிருந்த மதகில் உடைத்து அசா.1ன் இடது பக்க மூக்கில் குத்தியுள்ளார். சம்பவம் பற்றி நான் கேள்விப்பட்டு நானும், இளைய மகன் விக்னேஷீம் சம்பவ இடத்திற்கு சென்றோம். அசா.1 இரத்த வெள்ளதில் கிடந்தார். அவரை 108 ஆம்புலன்சு மூலம் நானும், இளைய மகனும் திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

S CINTHA
Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2024.11.20

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்